DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.12/2024**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | எஸ்டேட் கூலி வேலை(ஓய்வு) |
| பெயர் | - | முத்தையா | வட்டம் | - | |
| த/பெ | - | கூடலிங்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | வாட்டர்பால் | வயது | - | 69/2025 |
| சாதி | - | | | | |

**<u>03-01-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை) ( எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வாட்டர்பால் எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜோதி என்பவரை எனக்கு தெரியும். வழக்கின் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்ரவை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2023-ம் ஆண்டு 5-ம் மாதம் தேதி நினைவில் இல்லை. பகல் 03.30 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் தபால் அலுவலகத்திற்கு செல்லும்வழியில் சுமார் 05.00 டு 05.30 மணியளவில் 29-வது கொண்டை ஊசி வளைவில் போலீசார் அந்த இடத்தில் படம் வரைந்துகொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் பைக்கிள் சென்றநபருக்கு விபத்து ஏற்பட்டதால் போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். என்னுடன் ஜிவானந்தன் என்பவர் என்னுடன் சாட்சியாக கையொப்பம் செய்தார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அன்றைய தினம் 5.00 டு 5.30 மணிக்கு நான் மட்டும் சென்றேனா என்னுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் நான் மட்டும் தான் போனேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு படித்துக்காட்டவில்லை என்றால் சரிதான். நான் தற்போது குறுக்குவிசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.